Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **STC 284/2023** |
| Deposition of witness for | :: | **PW. 6** |
| Name | :: | **சுந்தரமகாலிங்கம்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2025

---

**1, 2 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர்.**

**13.10.2025**

**முதல் விசாரணை:**

1. நான் அருப்புக்கோட்டை உஜ்ஜிசாமி கோவில் மேற்கு தெருவில் குடியிருந்து வருகிறேன். அருப்புக்கோட்டை நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் மற்றும் ஒரு காவலர் ஆகிய இருவரும் பழைய தேவாங்கர் கலை கல்லூரி அருகே உள்ள என் மெக்கானிக் கடைக்கு வந்து XL இருசக்கர வாகனத்தை அசா.1 பரமேஸ்வரன் வீட்டில் வந்து பார்க்க சொன்னார்கள். நான் போய் பார்த்தேன். அதில் பழுதாகி இருந்த சாமான்கள், சரிசெய்ய என்ன சாமான்கள் வேண்டும் என்று சொல்லி அதை சீர் செய்து கொடுத்தேன். அதற்கான உரிதி பாகங்கள் மற்றும் கூலி ஆகியவற்றை சேர்த்து ரூ. 3000/- என்று சேதமதிப்பு சான்றும், உதிரி பாகங்கள் ரசீதும் போலீசாரிடம் வழங்கினேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் சேதமதிப்பு சான்று நான் வழங்கியதுதான். மற்றும் செந்திலாண்டவர் ஆட்டோ நிறுவனத்தில் நான் பொருட்கள் வாங்கியதற்கான ரசீதின் அடிப்படையில் நான் சேதமதிப்பு சான்றினை வழங்கினேன். மேற்படி ரசீது நான் வாங்கிய பொருட்களுக்காக எனக்கு வழங்கப்பட்டது. ( **சேதமதிப்பு சான்று அசாஆ.4 ஆகவும், உதிரி பாகங்கள்**

**வாங்கியதற்கான ரசீது அசாஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

**1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் சேதமதிப்பு சான்று வழங்கிய வாகனத்தை முதன்முதலில் காவல் நிலையத்தில் வைத்து தான் பார்த்தேன் என்றால் இல்லை பரமேஸ்வரன் வீட்டில் வைத்து பார்த்தேன். போலீசார் சொன்னதன் அடிப்படையில் தான் வண்டி சேதமடைந்த விவரம் எனக்கு தெரிய வந்தது என்றால் சரிதான். போலீசார் கேட்டு கொண்டதற்கு இணங்க தான் நான் சேதமதிப்பு சான்று வழங்கினேன் என்றால் சரியல்ல, நான் பார்த்த வேலைக்காக வழங்கினேன். நான் கொடுத்ததாக கூறும் சேதமதிப்பு சான்று மற்றும் எனக்கு கொடுத்ததாக கூறும் ரசீது ஆகியவை போலியாக வழக்கிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. போலீசார் என்னிடம் சாட்சி சொல்ல வேண்டும் கேட்டதினால் தான் தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வாகனமானது எந்த சேதமும் அடையவில்லை என்றாலும் போலீசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **STC 284/2023** |
| Deposition of witness for | :: | **PW. 5** |
| Name | :: | **ஐய்யப்பன்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2025

---

**1, 2 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர்.**
**13.10.2025**
**முதல் விசாரணை:**

**1.** நான் அருப்புக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 17.09.2023 ம் தேதி அசா.1 பரமேஸ்வரன் எனக்கு போன் செய்து அவரது வீட்டிற்கு வரசொன்னார். மேற்படி அசா.1 பரமேஸ்வரனின் வீட்டினை நான் தான் கொத்தனார் என்ற முறையில் கட்டி கொடுத்தேன். நான் போய் வீட்டை பார்த்தபோது அவரது காம்பவுண்டு சுவர் வீட்டிற்கு கிழக்கே உள்ள பகுதி உடைந்திருந்தது. அந்த உடைந்த பகுதியை சரி செய்ய 20 செங்கல், அரை மூடை சிமெண்ட், 10 தட்டு எம்சாண்ட் ஆகிய தளவாட பொருட்களும், அதற்குரிய கொத்தனார் சித்தாள் கூலி 1200/- சேர்த்து ஆக மொத்தம் ரூ.2000/- மேற்படி காம்பவுண்டு சுவரை சீர் செய்ய செலவானது அதற்கு நான் ரசீது வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் ரசீது தான் நான் வழங்கிய செலவினத்திற்கான ரசீது. ( **மேற்படி சேதமதிப்பிற்கு ஐய்யப்பன் வழங்கிய ரசீது அசாஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. மேற்படி அசாஆ.3 ரசீதில் எனது கையொப்பம் இல்லை என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியாது. மேற்படி ரசீதை கடையில் நான்

வாங்கிய பொருளுக்காக என்னிடம் கொடுத்தார்கள். மேற்படி ரசீதில் கொத்தனார், நிமிந்தாள் கூலி என்று ரூபாய் 1200/- குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எவ்வாறு கூலியை கடையில் வழங்கிய ரசீதில் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது என்ற காரணத்தினால் கடைக்காரரிடம் சொல்லி அதனையும் ரசீதுடன் இணைத்து கொடுக்க சொன்னேன், அதனால் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. அசா.1 பரமேஸ்வரன் எனக்கு பழக்கமானவர் என்றால் சரிதான், நான் அவருக்கு வீடு கட்டி கொடுத்ததினால் தெரியும். நான் எப்போது சுற்று சுவரை வேலை பார்த்து கொடுத்தேன் என்றால் சுமார் 19.09.2023 ல் வேலை பார்த்தேன். அசாஆ.3 ரசீதில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான், பொருட்கள் கம்மியான அளவிற்கு வாங்கியதால் கடையில் தேதி போட்டு கொடுக்கவில்லை. அசாஆ.3 ரசீதில் கடையின் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், சிறிய அளவிற்கு பொருள் வாங்கியதால் கடையின் பெயர் குறிப்பிடவில்லை. உண்மையில் நான் அசா.1 னின் வீட்டின் சுற்று சுவர் கட்டி கொடுக்கவில்லை என்றாலும், அவர் கேட்டு கொண்டதற்கு இணங்க நீதிமன்றத்தில் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல, நான் கூலிக்கு வேலை செய்து கொடுத்தேன் அதனை தான் நீதிமன்றத்தில் கூறுகிறேன். அசாஆ.3 ரசீதை அசா.1 தான் எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை.**